# அருப்புக்கோட்டை நகராட்சி

## நகர்மன்ற அவசரக்கூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 14ம் நாள் 2022ம் ஆண்டு 30.11.2022ம் நாள் புதன் கிழமை காலை 10.15 மணியளவில் அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட பொருட்கள் மன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கெள்ளப்படும்

(ஓம்)திரு.சி.சுந்தரலட்சுமி

இடம்: அருப்புக்கோட்டை — நகர்மன்றத்தலைவர்

நாள்: 26.11.2022 — அருப்புக்கோட்டை நகராட்சி

பொருள்1: ஆணையாளர் அவர்களது நவம்பர் 2022 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்:**318**

பதிவு செய்யப்பட்டது

பொருள்2: நகராட்சி பொறியாளர் நவம்பர் 2022 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்:**319**

பதிவு செய்யப்பட்டது

பொருள்3: பிறப்பு இறப்பு விவரம் கீழ்க்கண்ட விபரப்படிக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்டவை

| நவம்பர் 2022 | |
|---|---|
| பிறப்பு | 55 |
| இறப்பு | 45 |
| இறந்து பிறந்தவை | 0 |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

பதிவு செய்யலாம்.

தீர்மான எண்:**320**

பதிவு செய்யப்பட்டது

பொருள்4: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 25, கதவு எண் 23(1) எ, வரிவிதிப்பு எண்-126/025/901002 கொண்ட அருள்மிகு சொக்கநாத சுவாமி திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்ட சுப்புராஜ் திருமண மண்டபத்திற்கு சொத்துவரி உயர்வினை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கிற்கு மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. அதனை

எதிர்த்து மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கினை நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும் ஆன செலவினத்தொகை ரூ.14431/-ஐ திரு.டி.ராஜா தேசிங் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.4415/2022/அ2

தீர்மான எண்:**321**

அலுவலகக்குறிப்பு ஒத்தி அனுமதிக்கப்பட்டது

பொருள்5: விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நரகாட்சி வார்டு எண் 13, பாண்டியன் தெருவில் அமைந்துள்ள பொட்டில்பட்டி பாண்டியன் தெரு இந்து பள்ளர் ஊர் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட மாரியம்மன் திருக்கோவிலுக்கு வரிவிலக்கு சான்று கோரி மாயம்மன் திருக்கோவில் தலைவர் அவர்கள் 08.11.2022ம் தேதி அன்று மனு செய்துள்ளார்.

மேற்படி வருவாய் ஆய்வர் இடத்தினை நேரில் சென்று ஆய்வு செய்ததில் மேற்படி இடமானது வழிபாட்டுத் தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)சின்படி சொத்துவரியிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6222/2022/அ2

தீர்மான எண்:**322**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்6: நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண்.24470/2022/MA2, நாள் 08.08.2022ல் நகராட்சிகளில் தமிழ்நாடு மாவட்ட நகாட்சிகள் சட்ட பிரிவு 24-B24-Hன் படியும் அரசாணை (நிலை) எண்-92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.06.2022 மற்றும் அரசாணை (நிலை) எண் – 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.06.2022ன்படியும் வார்டு குழு மற்றும பகுதி சபா உருவாக்குவதற்கும் அதன் செயல்பாடுகளுக்கும் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்தும் விதிகள் மற்றும் அரசாணைகள் வெளியிடப்பட்டதன்படி

அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள மொத்தம் 36 வார்டுகளில் ஒரு வார்டுக்கு 4 பகுதி சபா குழுக்கள் அமைக்கப்பட்டு ஒரு வார்டுக்கு 4 உறுப்பினர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மேற்கண்ட விபரத்தினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கும் இந்நகர் மன்றத்தீர்மான எண் 305, நாள் 31.10.2022ன்படி முன்அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு இந்நகராட்சி வார்டுகளில் 01.11.2022 அன்று நடைபெற்ற நகர சபா கூட்ட அறிவிப்பினை தினகரன் நாளிதழில் விளம்பரம்

செய்த வகையில் விளம்பரக் கட்டணம் ரூ14,364/-ஐ Kal Publications (P) LTD நிறுவனத்திற்கு வாங்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4722/2022/எப்1

தீர்மான எண்:**323**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்7: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து கொள்முதல் செய்வதற்கு ந.க.எண் தீர்மான எண் 299, நாள் 31.10.2022 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 01.11.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பநத்தாரரின் பெய | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | A to Z enterprises<br>6th Street, Puzhudivakkam<br>Chennai | ரூ.80/- |
| 2. | Connekton Pvt Ltd.,<br>715-A 7th Floor,<br>Spencer Plaza, Annasalai,<br>Chennai | ரூ.70/- |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி ரூ.70/- அளித்த Connekton Pvt Ltd., Chennai ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.5618/2022/எச்1

தீர்மான எண்:**324**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்8: இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் கழிப்பறைகளில் இருந்து காற்று குழாய் மூலமாக வெளியேறும் முதிர்த்த கொசுகளை கட்டுப்படுத்தும் வகையில் காற்று குழாய் வலைகளை கொள்முதல் செய்வதற்கு ந.க.எண் தீர்மான எண் 297, நாள் 31.10.2022 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 01.11.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பநத்தாரரின் பெய | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | A to Z enterprises<br>6th Street, Puzhudivakkam<br>Chennai | ரூ.50/- |
| 2. | Connekton Pvt Ltd.,<br>715-A 7th Floor,<br>Spencer Plaza, Annasalai,<br>Chennai | ரூ.45/- |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி ரூ.45/- அளித்த Connekton Pvt Ltd., Chennai ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம். குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் அவசர அவசியம் ககரதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.5992/2022/எச்1

தீர்மான எண்:**325**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்9: அருப்பக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரபிரிவு பிளாஸ்டிக் பயன்பாடு நிரந்தரமாக தடைசெய்யும் நோக்கில் பிளாஸ்டிக் பை பதிலாக மீண்டும் மஞ்சப்பை பயன்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வீடுவீடாக சென்று மீண்டும் மஞ்சப்பை விளம்பரம் அடங்கிய ஸ்டிக்கர் ஒட்டவேண்டி உள்ளதால் ஸ்டிக்கர் சுமார் 20000 எண்ணமும், பிளாஸ்டிக்கில் எந்தெந்த பொருட்கள் பயன்படுத்தலாம் எந்தெந்த பொருட்களை பயன்படுத்தக்கூடாது என்கின்ற விபரம் அடங்கிய விளம்பர நோட்டீஸ் சுமார் 20000 எண்ணமும் அரசு அங்கீகாரம் பெற்ற கோவில்பட்டி சிறுதொழில் இன்டஸ்டீஸ் கூட்டுறவு சொசைட்டி மூலமக நேரடி கொள்முதல் செய்ய ஆணையரின் அனுமதியும் அதற்குண்டான உத்தேச செலவு தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

நகர்மன்றத்தின் முன்அனுமதி பெற்று கோவில்பட்டி சிறுதொழில் இன்டஸ்டீஸ் கூட்டுறவு சொசைட்டிக்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6243/2022/எச்1

தீர்மான எண்:**326**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்10:இந்நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்பணிகள் பார்த்து பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகைகளை திரும்ப வழங்கக்கோரி ஒப்பந்ததாரரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

| S.No. | Year | Name of Work | Amount | Contractor |
|---|---|---|---|---|
| 1 | 2015-16 | Street Light Maintenance work (File No.5929/22/b2) | 68180 | Sri Sudharsana Engineering Works |

மேற்படி வைப்புத்தொகை பிடித்தம் செய்யப்பட்டு 3 ஆண்டுகள் முடிவுற்றுள்ள நிலையில் Lapsed Deposit ஆக இருந்து வரும் நிலையில் மேற்படி தொகைக்கு தணிக்கை தடை ஏதும் நிலுவை இல்லாதாலும் மேற்கண்ட தொகை ஒப்பந்ததாரர்க்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.5929/22/பி2

தீர்மான எண்:**327**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்11:விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2021-22 (Untied)ன் கீழ் மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ.26.20 இலட்சத்திற்கு Supply & fixing of New 60HP vertical turbine pump set with electric motor and all accessories @ Kattangudi Boster Station பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31116/2021/அம்ரூத்-2 நாள் 05.01.2022ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 16.11.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Deccan Industries, Coimbatore என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.48 சதவீதம் அதிகமாக உள்ளதால் இப்பணிக்கான விலைகுறைப்பு சம்மத கடிதம் (Negotiation) வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க 21.11.2022 அன்று ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட விலைக்குறைப்பு கடிதத்தின்படி ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Deccan Industries, Coimbatore | 0.46 மதிப்பீட்டு விலையைவிட குறைவாக |
| 2. | Saras Pumpsets, Palani | 3.36 மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

அலுவலகக்குறிப்பு:-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.46% குறைவாக கொடுத்துள்ள M/s.Deccan industries, Coimbatore அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

ந.க.எண்.11610/2021/இ1

தீர்மான எண்:**328**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்12:அருப்புக்கோட்டை நகராட்சியில் வார்டு எண் 33ல் உள்ள சிறு தெருக்களில் உள்ள வாறுகால் மற்றும் சிறுபாலங்கள் சிதலம் அடைந்துள்ளதால் இதனை சரிசெய்து கொடுக்குமாறு நகர் மன்ற தலைவர் அவர்களது நேரடி அறிவுரையின்படி வார்டு 33ல் உள்ள வீராச்சாமி தெரு, அம்பேத்கார் தெரு, சத்தியவானி முத்து தெரு, புதுத்தெரு, மறவர் தெரு முதலிய தெருக்களில் உள்ள சிதலமடைந்த வாறுகால் மற்றும் சிறுபாலங்கள் மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6.00 இலட்சத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6470/2022/இ1

தீர்மான எண்:**329**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்13:அருப்புக்கோட்டை நகராட்சியில் வார்டு எண் 25 தேவாடெக்ஸ் கணேஸ்நகர் பகுதியில் விடுபட்ட தெருக்களில் தார்தளம் தளம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.8.25 இலட்சத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6472/2022/இ

தீர்மான எண்:**330**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்14:விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் – 35, பந்தல்குடி ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீ சாது தாத்தாசாமி கோவிலுக்கு வரிவிலக்கு சான்று கோரி திருக்கோவில் தலைவர் அவர்கள் 22.11.2022ம் தேதி அன்று மனு செய்துள்ளார்.

மேற்படி வருவாய் ஆய்வர் இடத்தினை நேரில் சென்று ஆய்வு செய்ததில் மேற்படி இடமானது வழிபாட்டுத்தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 (1)சின்படி சொத்துவரியிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மன்றம் அனுமக்கலாம் ந.க.எண்.6534/2022/அ2

தீர்மான எண்:**331**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்15:அருப்புக்கோட்டை நகராட்சிக்கு திருப்புவனம் குடிநீர் திட்டம், வைகை (Own Source)யானது அருப்புக்கோட்டையிலிருந்து 45 கி.மீ. தொலைவில் இருந்து பெறப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீரின் அளவு 36.00 இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 33.00 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கப்பெறுகிறது. மேலும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த்திட்டம், வல்லநாடானது (CWSS) அருப்புக்கோட்டையிலிருந்து 140கி.மீ. தொலைவில் இருந்து பெறப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீரின் அளவு 49.50 இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 32 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கப்பெறுகிறது. மேற்படி இரண்டு திட்டங்களையும் சேர்த்து மொத்தம் 86.00 இலட்சம் லிட்டர் (86 LPCD) குடிநீர் பெறப்பட்டு நகர் பகுதியில் 3 நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

திருப்புவனம் குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கட்டங்குடி நீர்உந்து நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.544.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் பிரேரனை சமர்பிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6750/2022/இ1

தீர்மான எண்:**332**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்16:அருப்புக்கோட்டை நகராட்சிக்கு திருப்புவனம் குடிநீர் திட்டம், வைகை (Own Source)யானது அருப்புக்கோட்டையிலிருந்து 45 கி.மீ. தொலைவில் இருந்து பெறப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீரின் அளவு 36.00 இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 33.00 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கப்பெறுகிறது. மேலும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த்திட்டம், வல்லநாடானது (CWSS) அருப்புக்கோட்டையிலிருந்து 140கி.மீ. தொலைவில் இருந்து பெறப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீரின் அளவு 49.50 இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 32 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கப்பெறுகிறது. மேற்படி இரண்டு திட்டங்களையும் சேர்த்து மொத்தம் 86.00 இலட்சம் லிட்டர் (86 LPCD) குடிநீர் பெறப்பட்டு நகர் பகுதியில் 3 நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

மேற்படி திருப்புவனம் குடிநீர் திட்டத்தில் கட்டங்குடி நீர்உந்து நிலையம் முதல் நகராட்சி பகுதியில் உள்ள மதுரை ரோடு மேல் நிலை நீர்தேக்க தொட்டிவரை 8 கி.மீ. நீளத்திற்கு 375mm CI குழாய்களில் அடிக்கடி உடைப்பு மற்றும கசிவுகள் ஏற்பட்டு நகருக்கு கிடைக்க கூடிய நீரின் அளவு குறைகிறது எனவே மேற்படி 375mm CI குழாய்களுக்கு பதிலாக 300mm DI குழாய்கள்

அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.536.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி உதவி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.4880/2022/இ1

தீர்மான எண்:**333**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்17: தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2021-22ன் கீழ் சிப்பம் III ல் ரூ.112.15 இலட்சத்திற்கு 11 தெருக்களில் தார்தளமாக மாற்றும் பணி நடைபெற்றுவருகிறது. இதில் கீழ்காணும் பணிகள் பேவர்பிளாக் தளமாக அமைக்கப்படவேண்டும் என நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததின் காரணமாக மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்கண்ட பணிகள் செய்வதை ரத்து செய்ததற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலை விபரம் | மதிப்பீட்டுத்தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண் 2 S.T.பெருமாள் தெரு (126012R210) சாலைப்பணி (தார்சாலை) | 12.00 |
| 2. | வார்டு எண் 14ல் VASS திருவண்ணாமலை தெரு (126014R228) சாலைப்பணி (தார்சாலை) | 6.65 |
| 3. | வார்டு எண் 8ல் ஜவஹர் சங்கம் கிழமேல் குறுக்குத் தெரு (126008S47) சாலைப்பணி (தார்சாலை) | 2.40 |
| 4. | வார்டு எண் 8ல் ஜவஹர்சங்கம் 1வது மேற்கு தெரு (126008R154) | |
| | சாலை (தார்சாலை) | 9.25 |
| | வாறுகால் | 1.60 |

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.9134/2021/இ1

தீர்மான எண்:**334**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்18: தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2021-22ன் கீழ் சிப்பம் VI ல் ரூ.120.00 இலட்சத்திற்கு 9 தெருக்களில் பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. இதில் கீழ்கண்ட தெருவில் தார்தளமாக மாற்றித்தர பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்ததின் காரணமாக மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்கண்ட பணியினை ரத்து செய்ததற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வேலை விபரம் | மதிப்பீட்டுத்தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தேவாடெக்ஸ் அய்யப்பன் நகர் (1260025R339) | |
| | சாலை | 7.30 |

| | | |
|---|---|---|
| | வாறுகால் | 6.83 |

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.9134/2021/இ1

தீர்மான எண்:**335**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்19: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரபிரிவு சித்த மருந்தகத்திற்கு அத்தியாவசியமான மருந்துகள் பற்றாக்குறையாக இருப்பதினால் அரசு அங்கீகராம் பெற்ற நிறுவனமான TAMPCOL, சென்னையிலிருந்து நேரடி கொள்முதல் செய்ய ஆணையரின் அனுமதியும் அதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூ.48656/-க்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

நகர்மன்றத்தின் முன்அனுமதி பெற்று TAMPCOL, நிறுவனம் சென்னை அவர்களுக்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:**336** ந.க.எண்.6396/2022/எச்1

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்20:இந்நகராட்சியில் தற்போது கீழ்கண்ட பணியிடங்கள் காலியாக இருந்துவருகிறது

| காலியாக உள்ள பிரிவு | காலிப்பணியிட விவரம் | காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொது | பதிவறை எழுத்தர் | 1 |
| | அலுவலக உதவியாள | 1 |
| பொறியியல் | மின் பணியாளர் | 1 |
| | மின் கம்பியாளர் | 1 |
| | மீட்டர் ரீடர் | 1 |
| | பம்ப் ரூம் அட்டெண்டர் | 4 |
| | பம்ப் மஸ்தூர் | 2 |
| | பணி ஆய்வாளர் | 2 |
| பொது சுகாதாரம் | சுகாதார மேற்பார்வையாளர் | 2 |
| | தூய்மை பணியாளர் | 65 |
| | மருத்துவ ஆயா | 1 |

மேற்கண்ட பணியிடங்கள் காலியாக இருந்து வருவதால் பொதுமக்களுக்ககு இந்நகராட்சியில் இருந்து செய்து கொடுக்க வேண்டிய அவசர அத்தியாவசியப் பணிகளான சாலை வசதி, வடிகால் வசதி குடிநீர் விநியோகம் மற்றும் பொது சுகாதாரப் பணிகளை உடனுக்குடன் செய்து கொடுப்பதில் தொய்வு ஏற்பட்டுவருகிறது. இதனால் பொது மக்ளிடமிருந்தும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே மேற்கண்ட பணியிடங்கள் அத்தியாவசியத் தேவையாக இருப்பதால் மேற்கண்ட பணியிடங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பூர்த்தி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மேற்கண்ட பணியிடங்கள் அத்தியாவசியத் தேவையாக இருப்பதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பூர்த்தி செய்து கொள்ள மன்றம் அனுமதிக்காம். ந.க.எண்.5325-1/22/சி1

தீர்மான எண்:337

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் 21: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட காந்திநகர் பகுதியில் திருச்சுழி ரோடு கதவு எண் 253(P) ல் வசித்துவரும் திரு.L.இராஜகோபால் என்பவர் குடிநீர் இணைப்புக்காக நகராட்சியில் செலுத்துயுள்ள வைப்புத்தொகையினை திரும்ப வழங்க கோரயுள்ளதனை தொடர்ந்து குடிநீர் குழாய் பொருத்துநர் மற்றும் உதவிப்பொறியாளர் அவர்கள் குறிப்பின்படி அன்னாருக்கு நாளது தேதிவரை குடிநீர் இணைப்பு வழங்கப்படாததால் மேற்படி நபரின் குடிநீர் வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4027/2022/இ1

தீர்மான எண்:338

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்22:இந்நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்பணிகள் பார்த்து பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகளை திரும்ப வழங்கக்கோரி ஒப்பந்ததாரரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

| S. No. | Year | Name of Work | Amount | Contrator |
|---|---|---|---|---|
| 1 | 2013-14 | Providing Paver Block at front side of Division office Near SBK School W.No.16 | 39739 | D.Sivakumar |
| 2 | 2014-15 | Providing Paver Block ponnam Perumal Kovil Street W.No.9 | 27500 | |
| 3 | 2016-17 | Providing Patch work South Rathaveethi Melarathaveethi Vadampokki Street | 4562 | |
| 4 | 2017-18 | Supply and Errection of 16 mtrs high mast light old Bus Stand | 39290 | |
| 5 | 2020-21 | Providing Paver Block @ Malaiyarasan Kovil Main Street W.No.28 | 79963 | |
| 6 | | | 2537 | |
| | | Total | 193591 | |

மேற்படி வைப்புத் தொகை பிடித்தம் செய்யப்பட்டு 3 ஆண்டுகள் முடிவுற்றுள்ள நிலையில் Lapsed Deposit ஆக இருந்து வரும் நிலையில் மேற்படி தொகைக்கு தணிக்கை தடை ஏதும் நிலுவை இல்லாததாலும் மேற்கண்ட தொகை மேற்கண்ட ஒப்பந்ததாரர்க்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.எண்.6213/2022/பி2

தீர்மான எண்:**339**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்23:அரசாணை நிலை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ன் படி அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விபரப்படி உள்ள கடைகளுக்கு மூன்றான்டுகாலம் முடிவடைவதால் ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் மன்றாண்டுகளுக்கு கீழ்கண்டவாறு உரிமத்தை புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ.எண். | வரிவிதிப்பு எண் | கடை எண் | குத்தகை தாரர் பெயர் | உரிமம் முடிவடையும் தேதி | ஏற்கனவே உள்ள மாத வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை (15 சதவீதம்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பழைய பேருந்து நிலைய கடைகள் | | | | | | | |
| | 126/129 | கடை எண்7 | T.Sராஜபாண்டியன் | 30.11.2022 | 2977 | 447 | 3424 |
| | 126/130 | கடை எண் 8 | T.S.தேரிபாண்டியன் | 30,11,2022 | 2977 | 447 | 3424 |
| | 126/131 | கடை எண் 9 | R.சந்திரசேகரன் | 30.11.2022. | 2977 | 447 | 3424 |
| | 126/132 | கடை எண்5 | M.காசிவிஸ்வநாதன் | 30.11.2022 | 2977 | 447 | 3424 |
| திருச்சுழி ரோடு கடைகள் | | | | | | | |
| 1 | 126/128 | கடைஎண் 1 | S.சௌந்தர்ராஜன் | 30.09.2022 | 4033 | 605 | 4638 |

அலுவலகக்குறிப்பு:-

1. அரசாணை (நிலை) எண் 92. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி மேற்கண்ட மூன்றாண்டு முடிவுற்ற கடைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 15% (பதினைந்து சதவீதம்) உயர்த்தி வசூலிக்கவும் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட கடையின் உரிமதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய தேதியில் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் 15% உயர்த்தப்பட்ட தொகையினை செலுத்தத்தவறினால் கடையினை மறுஏலம் விடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.11271/2018/அ1

தீர்மான எண்:**340**

அலுவலகக்குறிப்பு நிறுத்தி வைக்கப்படுகிறது

பொருள்24:அரசாணை (நிலை) எண் 529, Home (Trasport-IV) Department நாள் 24.11.2021ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண் 20719/2022/எம்எ1, நாள் 08.08.2022ன் படி நகராட்சிகளில் பயனற்ற நிலையில் உள்ள பழைய வாகனங்களை கழிவு நீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பைகளை சேகரிப்பதற்கு 15 எண்ணம் வாகனங்கள் உள்ளது இதில் 12 வாகனங்கள் நல்ல முறையில் வருடந்தோறும் பழுது

பணிகள் பார்த்து புதுப்பித்து வரப்படுகிறது மற்ற 3 வாகனங்கள் 2018 மற்றும் 2019 முதல் இயக்கப்டாமல் இருந்து அதன் விவரங்கள் கீழ்கண்டவாறு

| வ. எண். | வாகன எண் | வாகனத்தின் வகை | வாகனம் வாங்கிய தேதி | நிறுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | டிசிஎம் 1664 | டம்பர் பின் | 23.09.1988 | 2018 |
| 2 | டிஎன் 67 எ 3091 | மினி லாரி | 23.06.1997 | 2019 |
| 3 | டிஎன் 67 7319 | டம்பர் பின் | 20.10.1997 | 2019 |

எனவே மேற்படி வாகனங்களை கழிவு நீக்கம் செய்யவும் உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6223/2022/எச்1

தீர்மான எண்:**341**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்25:இந்நகராட்சி வார்டு எண் 12 S.T.பெருமாள் தெருவில் பேவர்பிளாக்தளம் அமைக்கும் பணி மேற்கொள்ள வார்டு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி பகுதி ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி தெருவில் சாலை பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.18.25 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.6471/2022/இ1

தீர்மான எண்:**342**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்26:அருப்புக்கோட்டையில் வார்டு எண் 14 VASS திருவண்ணாமலை தெருவில் சாலை வசதிகள் செய்துதருமாறு நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி தெருவில் சாலை பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.10.75 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5978/2022/இ1

தீர்மான எண்:**343**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்27:இந்நகராட்சியில் காந்திமைதானம் நகராட்சி நகர நலவாழ்வு மையத்திற்கு தளவாட சாமான்கள், குளிர்சாதன வசதி (Air Condition), மின்விசிறி ஆகியவை போதுமானதாக இல்லை என நகர்நலமையம் மருத்துவர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி வசதிகள் செய்தவற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.4,00,000/-த்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5977/2022/இ1

தீர்மான எண்:**344**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்28:மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 425/செமதொஅ/2022 நாள் 13.09.2022ன் படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகளை "மாலை மலர்" (தீபாவளி மலர்) நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு உரிய செலவுத்தொகை ரூ.9,975/-ஐ Malar Publications Limited, Madurai நிறுவனத்தருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2775/2022/இ1

தீர்மான எண்:**345**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்29: தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளையும், திறந்தவெளி கழிப்பிடமில்லாத பகுதியாக (ODF+) அறிவிப்பதற்கு மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்த நிபந்தனைகளின்படி அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வரை உள்ள வார்டுகளையும் திறந்தவெளி கழிப்பிடமில்லாத பகுதியாக அறிவிக்க வேண்டி, இப்பொருள் தொடர்பாக அதிகம் மக்கள் படிக்கும் வகையில் பிரசுரமாகும் ஏதேனும் இரண்டு தமிழ் நாளிதழில் ஒரு நாள் மட்டும் சிறிய அளவில் விளம்பரம் செய்து விளம்பரம் செய்த நாளிலிருந்து 15 தினங்களுக்குள் ஆட்சேபனை இருப்பின் உரிய ஆதாரங்களுடன் அலுவலக வேலை நாட்களில் நேரிலோ அல்லது commr.aruppukkottai@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவிக்க மன்றத்தின் அனுமதிக்கு ஆணையாளர் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6638/2022/எச்1

தீர்மான எண்:**346**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்30:அருப்புக்கோட்டை நகராட்சி தூய்மை இந்தியா இயக்கத்தின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR RATTING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக அருப்புக்கோட்டை நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம்பிரித்து கையாளப்பட்டுவருகிறது. எனவே அருப்புக்கோட்டை நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) அங்கீகரித்து மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெறவும் மற்றும் சுயஉறுதிமொழி சான்றிதழ் பெறுவதற்கும் மற்றும இது குறித்து விழிப்புணர்வு பொது மக்கள் அறியும் வண்ணம் அருப்புக்கோட்டை நரகாட்சிப்பகுதியில் வெளியாகும் அதிகம் மக்கள் படிக்கும் வகையி பிரசுரமாகும் ஏதேனும் இரண்டு தமிழ் நாளிதழில் ஒரு நாள் மட்டும் சிறிய அளவில் விளம்பரம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் அதற்கு உண்டான உத்தேச தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6640/2022/எச்1

தீர்மான எண்:**347**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்31:அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு பராமரிப்புல் உள்ள லீக் வாகனம் TN 67 A 7339 மினிலாரி (407) க்கான தகுதிச்சான்று 29.12.2022 ம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கான தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கு வாகனத்தில் உள்ள பழுது பணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற பனிமனை A.S.R.Body Works, Madurai மூலம் பணி மேற்கொள்ளவும், மேலும் அதற்காகும் செலவீனத்தொகை ரூ.1,46,998/-யை குடிநீர் நிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற பனிமனை A.S.R.Body works, Madurai அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6397/2022/இ2

தீர்மான எண்:**348**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்) திருமதி.சி.சுந்தரலட்சுமி
நகர்மன்ற தலைவர்
அருப்புக்கோட்டை நகராட்சி

ஆணையாளர்
அருப்புக்கோட்டை நகராட்சி